# திருக்குறளில் நிர்வாக ஆளுமை

**முனைவர் சி.கல்பனா**
**தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்**
**ஆர் வி எஸ் கலை அறிவியல் கல்லூரி.சூலூர்.**

4

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் என்பது மனித இனத்தின் அனைத்துலக மொழியாகும்.மனிதனுடைய விருப்பு வெறுப்பு களையும் எண்ணங்களையும் எழுச்சிகளையும், வேட்கைகளையும், குறிக்கோள்களையும் பிரதிபலிக்கிறது. அறநெறிக் கருத்துகளும், அனுபவ உண்மைகளும் அதில் பெற்று தாற் ஆக வேண்டும்.அப்பொழுது தான் அது வாழும் இலக்கியமாக விளங்க முடியும் .அந்த வகையில் திருக்குறள் மனிதனது நிர்வாக ஆளுமைப் பண்பை மேம்படுத்துவதற்குத் தக்க வழிகாட்டியாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** அகம், புறம், ஊக்கமுடைமை, அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்

**முன்னுரை**

இலக்கியம் என்பது நல்ல மனித இனத்தின் அனைத்துலக மொழியாகும்.அது குறிப்பிட்ட பண்பாட்டு வரையறைகளையும் கட்டுப்பாடுகளையும் கடந்து மனிதனுடைய விருப்பு வெறுப்பு களையும் எண்ணங்களையும், எழுச்சிகளையும், வேட்கைகளையும் குறிக்கோள்களையும் பிரதிபலிக்கிறது. மக்களுடைய வாழ்க்கையை அகம், புறம் என்று பாகுபாடு செய்து அதன் பல்வேறு இயல்புகளை நுட்பமாக ஆராய்ந்த சங்ககாலத்தை யொட்டிப் பறப்பொருளின் ஒரு பகுதியாகும்.அறத்தின் செயல் சிறப்பினை எடுத்துரைக்கும் அறநூல்கள் பல இயற்றப்பட்டன.அவற்றுள் திருக்குறளில் ஆளுமைப் பற்றி பல செய்திகளை உள்ளடக்கியது இக்கட்டுரையாகும்.

**ஆளுமை**

ஆளுமை உணர்வு அனைத்து உயிர்களிடமும் காணப்படுகின்றது. அது அறிவு உள்ள மனிதனிடம் மேலோங்கி நிற்கிறது.'யுங்' முழுமையான ஆளுமையைத் தற்பவம் என்று புலப்படுத்துகிறார். ப்ராய்டு ஆளுமைக் குறித்து உணர்த்துகையில் நடத்தையியலும்,ஆளுமையியலும் இயைபுத்துறைகள் ஆகும் என்கிறார். நடத்தைகளுக்கான. காரணிகளைக் கண்டறியும் போக்கில் ஆளுமை உளவியல் தோன்றியது. நனவியே மனித ஆளுமையின் பெரும்பங்கு வகுக்கிறது.

மேலும் ஆளுமை மனிதனிடம் காணப்படும் ஒட்டுமொத்த குணங்களின் தொகுப்பாக அமைவது. இத்தகைய ஆளுமையைக் கொண்டு ஒருவரை அடையாளப்படுத்திட முடியும். இதனை ஒரு மனிதன் மனிதாக வாழவும், மாமனிதனாக மேம்படவும் அவனுக்கு அடிப்படைத் தேவை ஆளுமைத்திறனாகும். ஆளுமைத்திறன் என்பது ஒரு மனிதனுடைய குணங்களின் திறமைகளின்

தொகுப்பாகும்.

**தலைமைப் பண்பு வகிப்பவர்களின் ஆளுமைத் திறன்;**

1. தலைமைப் பண்பு கொண்டவர்கள் நேரத்தை நுனுக்கமாகப் பயன்படுத்துவார்கள்.

2.அவர்கள் நாட்டின் நிர்வாகம் குறித்தே ஒவ்வொரு நொடியையும் செலவிடுவார்கள்.

3.சிறந்த நிர்வாகியாக இருப்பதற்கு திறந்த மனத்தோடு திகழ வேண்டும் .எதார்த்த வாதியாக இருக்க வேண்டும்.

4.தலைமைப் பண்பாளர்கள் உறுதியாக இருக்க வேண்டும்.நாம் பல நேரங்களில் சற்றும் குறையாத மனிதர்களை சந்திக்க நேரிடும்.அதிகாரம் கிடைத்ததும் அவர்கள் போடுகிற ஆட்டம் சில நிறுவனங்களில் எக்கசக்கமாக இருக்கும். ஆனால் அவற்றை எதிர் கொள்ள நம்மிடம் இருக்கும் ஒரே ஆயுதம் நேர்மை -உழைப்பு.

4.தலைமைப் பொறுப்பு உள்ளவர்களின் நம் மீது நிறுவனம் வைத்திருக்கும் நம்பிக்கையை உணர்ந்து முதிர்ச்சியுடன் செயல்பட வேண்டும்.

5.எதற்கும் கலங்காமல் குறைகளைப் பெரிதாக்காமல் நாம் இவ்வளவு உயர்ந்ததே பெரிது என எண்ணாமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிற மனிதர்களே அழுத்தமான தடம் பதிக்கும் தலைமைப் பண்பாளர்கள்.

6.சிறந்த தலைமை வகிப்பவர்கள் அனைத்து துறைகளிலும் அறிஞர்கள் பிரகாசிக்கும் சூழலை ஏற்படுத்துகிறார்கள்.

7.கண்டிக்க வேண்டிய கண்டித்தும், தண்டிக்க வேண்டிய நேரத்தில் தண்டித்தும்,கனிவு காட்ட வேண்டிய நேரத்தில் கனிவு காட்டியும் வழி நடத்துபவர்கள் சிறந்த தலைமைப்பண்பாளர்கள்.

8.தலைமைப் பொறுப்பில் ஜொலிக்க விரும்புகிறவர்கள் கரடுமுரடான பாதையை நேசிக்கிறார்கள்.தன்னிடம் பணியாற்றுபவர்கள் விரக்தியடையாமல் பார்த்துக் கொள்வார்கள்.

**வெற்றிக்கு உண்டான வழிகள் ;**

எந்த சூழ்நிலையானாலும் சரி அதைச்சமாளிக்க என்ன அறிவுரை வேண்டுமானாலும் ஒருவன் திருக்குறளில் இருந்து பெற்றுத் தெளிவடைய முடியும்.ஆன்மீகம் ஆகட்டும், லெளிகம் ஆகட்டும், அறம் ஆகட்டும், தொழில் ஆகட்டும், அமைதி ஆகட்டும், மகிழ்ச்சி ஆகட்டும், குழப்பாமல் வழி காட்டும் அறிவுப்பொக்கிஷம் திருக்குறள் தான். அந்த நூலில் ஆளுமைப்பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

**எண்ணத்தில் உறுதி :**

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப்பெறின்.

நினைத்ததை நினைத்தபடி அடைபவர் யார் தெரியுமா?தங்கள் எண்ணத்தில் உறுதியாக

இருப்பவர்கள் தான்.எண்ணத்தில் உறுதியாக இருப்பவர்கள் தான். எண்ணத்தில் உறுதி இல்லாவிட்டால் அது செயலில் முடியாது.செயலில் முடியாத எண்ணங்கள் விதைக்காத விதைகள். மாறாத உறுதியான எண்ணம்.

**நேர்மையான எண்ணம்;**

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நன்று.

எண்ணுவதெல்லாம் உயர்வான தாகவே இருக்க வேண்டும். பாதகமான சூழ்நிலையிலும் உயர்வான எண்ணங்களை எண்ணுவதை விட்டு விடக்கூடாது.எண்ணமே வாழ்க்கை என்பது அனுபவ உண்மை, சாதகமான சூழ்நிலையிலும் பாசிடிவ் அகவும், உயர்வான எண்ணங்களையும் நினைப்பது எளிய விஷயமல்ல.பாதகமான சூழ்நிலைகளிலும் அதே எண்ணங்களோடு இருப்பவன் தான் வெற்றியை தனதாக்கிக் கொள்கிறான்

**விடாமுயற்சி**

'ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தாங்கிச்
செல்வார்க்கு செல்லாதது இல்.

தனக்கு ப் பொருந்தும் செயலையும் அதற்கு அறிய வேண்டியதையும் அறீந்து அதனிடம் நிலைத்து முயல் கின்றவர்களுக்கு முடியாதது எதுவும் கிடையாது.வெற்றிக்கு ஆயிரம் வழிகள் இருக்கலாம்.நம் இயல்புக்கு பொருந்துகிற வழியைத் தேர்ந்தெடுத்து அதற்கு அதிய வேண்டிய அனைத்தையும் அறிந்து அந்த வழியில் விடாமுயற்சியுடன் முயன்றால் வெற்றி நிச்சயம்.

**தலைமைப்பண்பு**

தனக்குக் கீழ் செயல்படுபவர்களின் தனித் திறனை அறிந்து அவர்களுக்குரிய பணிகளை ஒதுக்கீடு செய்வது தலைமைக்குரிய தனித்திறனாகும்.இதனை வள்ளுவர், '

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

என்ற குறளில் இந்தச் செயலை இந்த முறையில் இவன் செய்து முடிப்பான் என்று தெரிந்து அச்செயலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறுகிறார்.

**ஊக்கமுடைமை**

ஊக்கமே ஆக்கத்திற்கு அடிப்படை ஆகும்.ஊக்கமுடையே நிலையான உடமையாகவும், அதுவே மனத்துள் நீங்காத செல்வமாகவும் விளங்குகிறது.ஆனால் பொருளோ நில்லாது நீங்கிவிடும். மேலும் உடையார் எனப்படுவது ஊக்கம் ஆகும்.ஊக்கம் உடையவனுடைய இடம் எங்கே என்று செல்வம் தேடிச்செல்லும்.இக்கருத்தை

'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையான் உழை

என்னும் குறட்பா மூலம் ஊக்கமுடையவனிடம் ஆக்கமானது தேடி வரும்.முயற்சி செய்தால் எந்தக் காரியமும் கைகூடும் என்று கூறுகிறார்.

**தன்னம்பிக்கை:**

ஒரு மனிதனுடைய வாழ்வுக்கும்,வளர்ச்சிக்கும் தன்னம்பிக்கையே உயிர் நாடி போன்றது.மனிதன் எதையும் சாதிக்க தன்னம்பிக்கையே ஊன்றுகோல். தன்னம்பிக்கையோடு எந்தச் செயலைச் செய்தாலும் வெற்றி நிச்சயம் கிட்டும்.ஒவ்வொரு வரிடமும் திறமைகள் இருக்கின்றன.அதனை வெளிக்கொணராத் தன்னம்பிக்கை வேண்டும் என்பதனை

நீ சிறிய
விதை தான்
ஆனால்
உனக்குள் ஒளிந்திருக்கிறது
பிரம்மாண்டமான மரம்

கவிஞர் அப்துல் ரகுமான் உணர்த்துகின்றார்.

தோல்வியால் வாழ்க்கையின் உண்மைப் பொருளை அறிய முடியும்.தோல்வியால் எத்தனை முறை வீழ்ந்தாய் என்பது கணக்கல்ல.தன்னம்பிக்கையோடு எத்தனை முறை எழுந்தாய் என்பது தான் சிறப்பு.

**அஞ்சாமையும் வலிமையும்:**

எலிகள் எல்லாம் பெரும் கூட்டமாகச் சேர்ந்து, கடல் அலை போல ஆரவாரம் செய்தாலும், அந்தக் கூட்டத்தால் என்ன செய்ய முடியும்?

ஆனால் விஷம் உள்ள நல்ல பாம்பானது சீறி மூச்சுவிட்டால் போதும்.எல்லா எலிகளும் பயந்து நடுங்கி ஓடி விடும்.அது போல,வீரம் இல்லாத பெரிய படை,அணி திரண்டு இருந்தாலும், அஞ்சாத சிறிய படை வீரத்தோடு தாக்கினால், பெரிய படையானது அழிந்து விடும்.

படையின் எண்ணிக்கை அளவு முக்கியம் அல்ல; அஞ்சாமையும் வலிமையும் முக்கிய சிறப்புடையவன ஆகும்.

'ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை

நாகம் உயிர்ப்பக் கெடும்.

**இறைமாட்சியில் காணப்படும் தலைமைப்பண்புகள் :**

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய நான்கு பண்புகளும் வேந்தர்களுக்குச் சிறிதும் குறைவின்றி இயல்பாக இருக்க வேண்டும்.

**முடிவுரை:**

திருவள்ளுவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது மரபையும் மீறிய புதுமையை சொல்வதில் புகுத்துவது, எதையும் காலம் தாண்டி சிந்திப்பது, மனித நேயத்தையே எப்போதும் தூக்கிப்பிடிப்பது. எப்பொருளை யார் சொன்னாலும் அதன் மெய்ப்பொருளை நாமாக அறிவது, சுருக்கமாகப்பேசுவது ஆகும்.மனிதன் ஆளுமைப்பண்போடு வாழ்வதற்குத் திருக்குறள் ஒரு வழி காட்டி நூலாக அமைந்துள்ளது.

**பார்வை நூல்கள்:**

1.எஸ். சுந்தரசீனிவாசன் - ஆளுமை மேம்பாடு

2.பரிமேலழகர் உரை - திருக்குறள்